# தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா!

## ஆண்டு முழுவதும் நடத்தப்பட வேண்டிய நிகழ்ச்சிகள்



## தலைமைக் கழகம் அறிவிப்பு

### தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா

"நூற்றாண்டு நாயகர் தமிழினத் தலைவர் கலைஞர்" அவர்களின் பன்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலன் திட்டங்களையும் ஓராண்டு முழுவதும் எடுத்துரைத்தாலும் முழுமையடையாது என்றாலும், தமிழ்நாட்டின் வருங்காலத் தலைமுறையினர் அவரை என்றென்றும் நினைவில் கொள்ளும் வகையில் நூற்றாண்டு விழாவினை எழுச்சியோடும் உணர்ச்சியோடும் எங்கெங்கும் நடத்திட வேண்டுமென 5.8.2023 அன்று காலை, காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற "தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில்" தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த அறிவுறுத்தலின் பேரில்

ஆண்டு முழுவதும் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை கீழே பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள விவரத்தின்படி நிகழ்ச்சிகளை நடத்தி வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**மாவட்ட வாரியாக பேச்சுப் போட்டி நடத்தி மாநில அளவில் சிறந்த 100 பேச்சாளர்களைக் கண்டறிந்து கழகச் சொற்பொழிவாளர்களாக மாற்றுதல் மற்றும் அவர்களுக்கு மண்டல வாரியாக ஒருநாள் பயிலரங்கு அளித்தல்**

**பொறுப்பு அணி : இளைஞர் அணி**

- பேச்சுப் போட்டிக்கான திராவிடக் கொள்கைகள் சார்ந்த தலைப்புகள், நடைபெறும் இடம் மற்றும் தேதி போன்றவற்றை ஆகஸ்ட் மாத இறுதிக்குள் தேர்வு செய்து தலைமைக் கழகத்திற்கு அனுப்ப வேண்டும். போட்டியாளர்களுக்கான வயது வரம்பு 18 முதல் 35க்குள் இருத்தல் வேண்டும்.
- பேச்சுப்போட்டி குறித்து விளம்பரப் பதாகைகள் மற்றும் சுவரொட்டிகள் மூலம் விளம்பரப் படுத்த வேண்டும். மேலும் சமூக வலைதளம், உள்ளூர் தொலைக்காட்சி மற்றும் ஒலி நாடாக்கள் மூலமாகவும் ஒரு வாரத்திற்கு முன்னதாகவே விளம்பரம் செய்யத் தொடங்க வேண்டும்.
- மாவட்ட வாரியான போட்டிகள் செப்டம்பர் மாதத்திற்குள் நடத்தப்பட்டு அதில் கழக மாவட்டம் வாரியாக சிறந்த மூன்று பேச்சாளர்கள் தேர்வு செய்யப்பட்டு அந்தப் பட்டியலை தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- பின்பு மாநில அளவில் போட்டிகள் அக்டோபர் மாதத்திற்குள் நடத்தப்பட்டு சிறந்த 100 பேச்சாளர்களைக் கண்டறிந்து அந்தப் பட்டியலை தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- தேர்வு செய்யப்பட்ட 100 பேச்சாளர்களைக் கழகச் சொற்பொழிவாளர்களாக மாற்ற அவர்களுக்கு மண்டல வாரியாக ஒவ்வொரு மண்டலத்திலும் நவம்பர் மாதத்திற்குள் கழகத்தின் சொற்பொழிவாளர்களால் ஒருநாள் பயிலரங்கம் நடத்தப்பட வேண்டும்.
- இவர்கள் இளைஞர் அணி மாநாட்டில் ஊக்குவிக்கப்பட வேண்டும்

### கலைஞர் படிப்பகங்கள்

**பொறுப்பு அணி : இளைஞர் அணி**

- அண்ணா பிறந்தநாள் அன்று அனைத்து மாவட்டத்திலும் முத்தமிழறிஞர் கலைஞர் படிப்பகங்களுக்கான திறப்பு விழாவினை டிசம்பர் மாதத்திற்குள் ஏற்பாடு செய்ய வேண்டும்.
- அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்கள் கொண்டு திறப்பு விழாவினை நடத்திட வேண்டும்.
- படிப்பகங்களில் கலைஞர் வாழ்க்கை வரலாறு, கலைஞரின் படைப்புகள், கழக ஆட்சியின் சாதனைகள் விளக்கும் புத்தகங்கள் ஆகியவை இடம் பெற வேண்டும்.
- கணினி வசதியுடன் கூடிய நவீனப் படிப்பகத்தை டிசம்பர் மாதத்திற்குள் உருவாக்கிட வேண்டும்.
- படிப்பகங்கள் அனைத்து மக்களும் எளிதாகப் பயன்படுத்தும் வகையில் இருக்க வேண்டும்.

### மாவட்டம் வாரியாக மாரத்தான் தொடர் ஓட்டம்

**பொறுப்பு அணி : இளைஞர் அணி**

- ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திலும் மாரத்தான் தொடர் ஓட்டம் நடைபெறும் தேதி, இடம், வழித்தடம் மற்றும் தொலைவு ஆகியவற்றை இறுதி செய்து தலைமைக் கழகத்திற்கு அனுப்ப வேண்டும்.
- ஒவ்வொரு வருவாய் மாவட்டம் வாரியாக மாரத்தான் தொடர் ஓட்டத்தில் கலந்துகொள்ளும் வீரர்களின் தகவல்களை முன்பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். (online or offline)
- மாரத்தான் போட்டிகளில் பங்குபெறுவோர்களின் இறுதிப் பட்டியலை உறுதி செய்து ஆகஸ்ட் மாதத்திற்குள் தலைமைக் கழகத்திற்கு அனுப்பவேண்டும்.
- கழக மாவட்டத்தில் உள்ள அனைத்து நகரங்களிலும், பேரூர்களிலும், ஒன்றியங்களிலும் மாரத்தான் தொடர் ஓட்டம் குறித்து, சமூக வலைதளங்கள் மற்றும் உள்ளூர் தொலைக்காட்சிகள் மூலமாக ஒரு வாரத்திற்கு முன்னதாகவே விளம்பரம் செய்ய வேண்டும்.
- பங்குபெறுவோருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகைப்படத்துடன் கூடிய TShirt அளிக்கப்பட வேண்டும். மேலும் மாரத்தான் ஓட்டத்தின் போது தேவையான அனைத்து பாதுகாப்பு வசதிகள், மருத்துவ உதவிகள் மற்றும் அடிப்படை வசதிகள் ஆகியவற்றை உறுதி செய்யவேண்டும்.
- கழக மாவட்டங்களில் மாரத்தான் போட்டிகளை நவம்பர் மாதத்திற்குள் நடத்தப்பட்டு அதில் வெற்றி பெறுவோர்களுக்கு தகுந்த பரிசுகளும், சான்றிதழ்களும் அளிக்கப்பட வேண்டும்.

### கலைஞர் Reels

**பொறுப்பு அணி : தகவல் தொழில்நுட்ப அணி**

- மாவட்டங்களில் உள்ள தகவல் தொழில்நுட்ப அணியினரைக் கொண்டு ஆகஸ்ட் மாதம் முதல் சமூகவலைதளங்களில் Reels செய்து பதிவிட வேண்டும்.
- சமூகவலைதளங்களில், கலைஞர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுத் தொகுப்பு மற்றும் சிறப்பு அம்சங்களை Reels ஆக உருவாக்கி கழக மாவட்டத்திற்கு மாதந்தோறும் குறைந்தபட்சம் 15 Reels களைப் பதிவிட வேண்டும்.
- "கலைஞர் 100" Hashtag ல் Reelsகளை ஜூன் மாதம் 2024 வரை பதிவு செய்ய வேண்டும்.
- மாவட்டங்களில் உள்ள தி.மு.க. கழகப் பக்கங்களிலும், Whatsapp குழுக்களிலும் பதிவுசெய்யப்பட்டு பகிரப்பட வேண்டும்.

### கலைஞர் 100 சமூக வலைதளம்

**பொறுப்பு அணி : தகவல் தொழில்நுட்ப அணி**

- தகவல் தொழில்நுட்ப அணி மூலம் 'கலைஞர் 100' என்ற பெயரில் பேஸ்புக், ட்விட்டர் மற்றும் Youtube பக்கங்களை ஆகஸ்ட் முதல் வாரத்திற்குள் தொடங்க வேண்டும்.
- கலைஞர் 100 என்ற சமூக வலைதளங்களில், கலைஞர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுத் தொகுப்புகளை உருவாக்கி பதிவிட வேண்டும்.
- அந்தந்த மாவட்டங்களில் நடக்கும் கலைஞர் நூற்றாண்டு விழாக்களை, கலைஞர் 100 என்ற Hashtag பயன்படுத்தி பதிவு செய்ய வேண்டும்.
- கலைஞர் 100 என்ற Youtube தளங்களில் கலைஞரின் வாழ்க்கை வரலாறு மற்றும் சாதனைகளை விளக்கும் காணொளிகளை பதிவு செய்ய வேண்டும்.

### அனைத்து பள்ளி , கல்லூரி அளவில் கவியரங்கம், கட்டுரைப் போட்டி ,பேச்சுப் போட்டிகள்

**பொறுப்பு அணி : மாணவர் அணி**

- தலைப்புகளை தேர்வு செய்து மாவட்டத்தில் உள்ள அனைத்து மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் அனைத்து கலைக் கல்லூரிகளுக்கு கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி மற்றும் கவியரங்கம் குறித்து அரசு சார்பில் சுற்றறிக்கையை ஆகஸ்ட் மாதம் இரண்டாம் வாரத்திற்குள் அனுப்பவேண்டும்.
- பள்ளி,கல்லூரிகளில் போட்டிகளை நடத்தி வெற்றி பெற்றவர்களின் விவரங்களை சேகரித்து மாவட்ட அளவிலான போட்டிக்கு அனுப்பவேண்டும்.
- மாவட்ட அளவில் போட்டி நடத்துவதற்கான தேதி, இடம் போன்றவற்றை இறுதி செய்து போட்டிகளை ஏற்பாடு செய்து வெற்றியாளர்களை தேர்வுச் செய்ய வேண்டும்.
- மாவட்ட அளவிலான போட்டிகள் ஆகஸ்ட் மாதத்தின் இறுதிக்குள் முடித்து முடிவுகளை அனுப்பவேண்டும்.
- மாநில அளவிலான போட்டிகள் சென்னையில் செப்டம்பர் மாதம் நடத்தப்பட்டு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை அமைச்சர்கள் வழங்க வேண்டும்.

### கலைஞர் நூற்றாண்டில் அவர் நடத்திய தமிழ்நாடு மாணவர் மன்றம் மீண்டும் உருவாக்கப்பட்டு கல்லூரிகளில் தனி அமைப்பாகச் செயல்பட ஏற்பாடு

**பொறுப்பு அணி : மாணவர் அணி**

- தமிழகத்தில் உள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் திராவிடக் கொள்கைகளைக் கொண்ட மாணவர்கள் மூலம் தமிழ்நாடு மாணவர் மன்றம் உருவாக்கப்பட வேண்டும்.
- இந்த தமிழ்நாடு மாணவர் மன்றமானது அரசியல் சார்பற்று கல்லூரி மாணவர்களின் தேவைகளையும் பிரச்சனைகளையும் பூர்த்தி செய்யும் விதமாக மாநில அளவில் ஒரு தலைமையின் கீழ் செயல்பட வேண்டும்.
- இது தி.மு.க. மாணவர் அணியுடன் இணைந்து செயல்பட வேண்டும்.
- இந்த மன்றங்களில் ஆண்டுதோறும் திறனாய்வுப் போட்டிகளை நடத்தி வெற்றியாளர்களுக்கு தகுந்த அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும்.

### மகளிர் அணியின் சார்பில் அகில இந்திய அளவிலான பெண் தலைவர்களின் கருத்தரங்கம்.

**பொறுப்பு அணி : மகளிர் அணி**

- சென்னையில் அகில இந்திய அளவிலான பெண் தலைவர்கள் பங்குபெறும் கருத்தரங்கம் அக்டோபர் மாதத்திற்குள் நடத்திட ஏற்பாடு செய்ய வேண்டும். கருத்தரங்கத்தில் பங்குபெறும் தலைவர்கள் பட்டியல் மற்றும் நடைபெறும் இடம், தேதி போன்றவற்றை இறுதி செய்து தலைமைக் கழகத்திற்கு அனுப்ப வேண்டும்.
- கருத்தரங்கம் குறித்த தகவல்களை பதாகைகள், சுவரொட்டிகள், தொலைக்காட்சி விளம்பரங்கள் மற்றும் சமூக வலைதளங்கள் போன்றவற்றின் மூலம் விளம்பரப்படுத்த வேண்டும்.
- மேலும் நிகழ்ச்சியினை தொலைக்காட்சிகள் மற்றும் Youtube, Facebook, Instagram போன்ற சமூக வலைதளங்களிலும் நேரலையில் ஒளிபரப்ப ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.
- நிகழ்ச்சிகளில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முகம் பொருந்திய முகமூடிகள், கலைஞர் 100 (Infinity Logo) என்ற வாசகம் கொண்ட விசிறி அட்டைகள், கழக அரசின் சாதனைகள் அடங்கிய துண்டுப்பிரசுரங்கள் ஆகியவை பார்வையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.
- கருத்தரங்கில் பங்குபெறும் தலைவர்களுக்கு கலைஞர் நூற்றாண்டு நினைவுப் பரிசினை வழங்கி மரியாதை செய்து சிறப்பிக்க வேண்டும்.

### மகளிர் அணியின் சார்பில் "கலைஞரும், மகளிர் மேம்பாடும்" எனும் தலைப்பில் பயிற்சிப் பாசறை மற்றும் பயிலரங்கங்கள்

**பொறுப்பு அணி : மகளிர் அணி**

- கழக மாவட்ட வாரியாக பயிற்சிப் பாசறை மற்றும் பயிலரங்கங்களில் பங்குபெறும் கழக பேச்சாளர்கள், நடைபெறும் இடம்,தேதிகள் ஆகியவற்றின் பட்டியலை செப்டம்பர் மாதம் முதல் வாரத்திற்க்குள் இறுதி செய்து தலைமைக் கழகத்திற்கு அனுப்ப வேண்டும்.
- அனைத்துக் கழக மாவட்டங்களிலும் பயிற்சிப் பாசறை நடைபெறும் இடங்களைத் தயார் செய்து வாரம் இருமுறை நிகழ்ச்சியை நடத்த ஏற்பாடு செய்யவேண்டும்.
- கழக மாவட்டங்களில் உள்ள அனைத்து ஒன்றியம், பகுதி, பேரூர் மற்றும் நகரங்களில் உள்ள மகளிர், கழக மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்வதை உறுதி செய்யவேண்டும்.
- ஒவ்வொரு பயிலரங்கக் கூட்டத்திலும் குறைந்தபட்சம் 500 மகளிராவது கலந்து கொள்ளும் வகையில் ஏற்பாடுகளை செய்யவேண்டும் .
- நிகழ்ச்சியில் கலந்து கொள்வோரின் தகவல்களை, படிவங்களின் மூலம் சேகரித்துக்கொள்ள வழிவகை செய்யவேண்டும்.
- கலந்து கொள்வோரின் தொலைபேசி எண்களை whatsapp group - ல் இணைத்து, அதில் அரசின் சாதனைகள் குறித்த குறுஞ்செய்திகளை பகிர்வதன் மூலமாக சமூக ஊடக பிரச்சாரத்திற்கு பயன்படும் வகையில் வழி செய்ய வேண்டும்.

### மாணவர்களுக்கு இடையேயான வினாடி - வினா போட்டிகள்

**பொறுப்பு அணி : மகளிர் அணி**

- வினாடி-வினா போட்டியினை நடத்துவதற்கும், மாணவர்கள் தாங்களாகவே அதில் பதிவு செய்து பங்குபெறும் வகையிலும் செயலி ஒன்றினை வடிவமைத்து ஆகஸ்ட் மாதம் இறுதிக்குள் தலைமைக் கழகத்தின் ஒப்புதல் பெறவேண்டும்.
- இந்த செயலி 1-12 வயது, 13-18 வயது மற்றும் 19-22 வயது ஆகிய மூன்று பிரிவுகளில் போட்டியினை நடத்தும் வகையில் அமைத்திடல் வேண்டும்.
- வினாடிவினா போட்டிகள் தமிழக வரலாறு, திராவிட வரலாறு, இந்திய வரலாறு, இந்திய அரசியலமைப்பு ஆகிய தலைப்புகள் குறித்ததாக அமையவேண்டும்.
- வினாடி-வினா போட்டி குறித்து பொதுமக்களும் அறியும் வகையில் செய்தித்தாள் விளம்பரங்களின் மூலமாகவும், பள்ளிகளுக்கு சுற்றறிக்கை மூலமாகவும் ஆகஸ்ட் மாதம் இறுதிக்குள் தெரிவிக்கப்படவேண்டும்.
- மாவட்ட அளவிலான போட்டிகளை செப்டம்பர் முதல் வாரத்திற்குள்ளும், மண்டல அளவிலான போட்டிகளை நவம்பர் முதல் வாரத்திற்குள்ளும், மாநில அளவிலான போட்டிகளை டிசம்பர் முதல் வாரத்திற்குள்ளும் நடத்தி இறுதி முடிவுகளை தலைமைக் கழகத்திற்கு அனுப்பவேண்டும்.
- வெற்றியாளர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் மாவட்ட, மண்டல, மாநில வாரியாக நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்து சிறப்பு விருந்தினர்களின் மூலம் வழங்கப்படல் வேண்டும்.

### திருநங்கைகள் - மாற்றுத் திறனாளிகள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள்

**பொறுப்பு அணி : மகளிர் தொண்டர் அணி**

- மண்டல வாரியாக மாவட்டக் கழகச் செயலாளர்களின் ஒருங்கிணைந்த ஏற்பாட்டில் திருநங்கைகள் - மாற்றுத் திறனாளிகள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்யவேண்டும்.
- ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு மண்டலம் என 5 மாதங்களில் 5 மண்டலங்களில் அக்டோபர் மாதத்திலிருந்து பிப்ரவரி மாதத்திற்குள் நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும்.
- நிகழ்ச்சி நடைபெறும் இடத்தில் மாற்றுத் திறனாளிகள் கலந்து கொள்ள ஏதுவாக அனைத்து ஏற்பாடுகளையும் செய்யவேண்டும்.
- "பெயர் மாற்றத்தின் மூலம் மட்டும் அல்லாது பல்வேறு சீர்மிகு திட்டங்களின் வாயிலாகவும் திருநங்கைகள் - மாற்றுத் திறனாளிகள் முன்னேற்றம் அடையச் செய்தவர் கலைஞர்" எனும் தலைப்பில் நிகழ்ச்சியினை நடத்திட வேண்டும்.
- திருநங்கைகள் - மாற்றுத்திறனாளிகளுக்கு கலைஞரும் அவரை தொடர்ந்து கழக அரசும் செய்த சாதனைகளை பட்டியலிடும் விதமாக திராவிட இயக்கச் சிந்தனையாளர்களைச் சிறப்பு விருந்தினர்களாக அழைத்து நிகழ்ச்சியை நடத்த வேண்டும்.
- இந்நிகழ்ச்சியினை அனைத்துத் தரப்பு மக்களிடமும் கொண்டு சேர்க்க சமூக வலைதளம் மற்றும் தொலைக்காட்சியின் வாயிலாக ஒளிபரப்ப வேண்டும்.
- பல்வேறு துறைகளில் சாதித்த திருநங்கைகள் - மாற்றுத் திறனாளிகளை நிகழ்ச்சிக்கு அழைத்து கௌரவிக்க வேண்டும்.
- திருநங்கைகள் - மாற்றுத் திறனாளிகளின் தேவைகள் மற்றும் கோரிக்கைகளை விண்ணப்பங்களாக பெற்று அரசின் கவனத்திற்கு கொண்டு வர வழிவகை செய்ய வேண்டும்.

### மகளிர் அணியின் சார்பில் "PODCAST"

**பொறுப்பு அணி : மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி**

- மகளிருக்கான சிறப்புத் திட்டங்கள், கழக அரசின் இரண்டு ஆண்டு சாதனைகள் மற்றும் திராவிடக் கொள்கைகள் சார்ந்த 100 வலைஒலிகளை (PODCAST) உருவாக்கி அக்டோபர் மாதத்திற்குள் அனுப்பி தலைமைக் கழகத்தில் ஒப்புதல் பெற வேண்டும்.
- அனைத்து மக்களுக்கும் எளிதில் புரியும் வகையில் வலைஒலிகள் உருவாக்கப்பட்டு மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.
- அனைத்து முக்கியமான மின்னணுத் தளங்களிலும், செயலிகளிலும் கழக வலைஒலி (PODCAST) கிடைக்கப் பெறுவதை உறுதி செய்ய வேண்டும். மேலும் வானொலிகளிலும் வெளியிட வேண்டும்.

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்